தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

அறிவிக்கை எண்:5B/2026 **நாள்: 13.08.2026**

ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு – I (தொகுதி I பணிகள்)

பிற்சேர்க்கை

1. 23.06.2026 நாளிட்ட அறிவிப்பு எண் 05/2026-இன் பத்தி 3.1-இன் படி, பின்வரும் பதவிகளுக்கான காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது:

வ. எண்	பதவியின் பெயர்	பதவிக் குறியீடு	பணியின் பெயர்	காலிப்பணியிட எண்ணிக்கை (திருத்தப்பட்டது)
1.	உதவி ஆணையர் (வணிக வரிகள்)	1003	தமிழ்நாடு வணிகவரிப் பணி	10
2.	கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர்	1004	தமிழ்நாடு கூட்டுறவுப் பணி	06*
* குறைவு காலிப்பணியிடங்கள் உட்பட				

2. 23.06.2026 நாளிட்ட அறிவிப்பு எண் 05/2026-இன் பத்தி 3.2-இன் படி, ஒத்த தகுதி நிபந்தனைகளைக் கொண்ட பின்வரும் பதவிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

வ. எண்	பதவியின் பெயர்	பதவிக் குறியீடு	பணியின் பெயர்	காலிப்பணியிட எண்ணிக்கை	ஊதிய நிலை
1.	உதவி இயக்குநர் ஊரக வளர்ச்சி	1006	தமிழ்நாடு ஊரக வளர்ச்சிப்பணி	06	தரம் 22
2.	மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர்	1007	தமிழ்நாடு பொதுப்பணி	03	

3. வயது வரம்பு: (01.07.2026 அன்றுள்ளபடி.)

தேர்வர்கள் அனைத்து பதவிகளுக்கும் குறைந்தபட்ச வயதான 21 வயதினை நிறைவு செய்திருக்க வேண்டும். வகுப்புவாரியான உச்ச வயது வரம்பு மற்றும் வயது வரம்பு சலுகை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

3.1. பிறவகுப்பினர் (ஆ.தி, ஆ.தி(அ), ப.ப, மி.பி.வ/ சீ.ம, பி.வ(இ.அ), மற்றும் பி.வ.(இ) சாராத தேர்வர்கள்)

வ. எண்	பதவியின் பெயர்	பதவிக் குறியீடு	உச்ச வயது வரம்பு (நிறைவடைந் திருக்கக்கூ டாது)	வயது வரம்புச் சலுகை		
				நிர்ணயிக்கப் பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள்	முன்னாள் இராணுவத் தினர்	ஆதரவற்ற விதவை
1.	உதவி இயக்குநர் ஊரக வளர்ச்சி	1006	34	44	50	39
2.	மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர்	1007				

3.2. ஆ.தி, ஆ.தி(அ), ப.ப, மி.பி.வ/ சீ.ம, பி.வ(இ.அ), மற்றும் பி.வ.(இ)

வ. எண்	பதவியின் பெயர்	பதவிக் குறியீடு	உச்ச வயது வரம்பு (நிறைவடைந்தி ருக்கக்கூடாது)	வயது வரம்புச் சலுகை		
				நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள்	முன்னாள் இராணுவத் தினர்	ஆதரவற்ற விதவை
1.	உதவி இயக்குநர் ஊரக வளர்ச்சி	1006	39	49	55	39
2.	மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர்	1007				

4. கல்வித் தகுதி :

வ. எண்	பதவியின் பெயர்	பதவிக் குறியீடு	கல்வித் தகுதி
1.	உதவி இயக்குநர் ஊரக வளர்ச்சி	1006	1. தேர்வர்கள் இந்தியாவில் உள்ள மத்திய அல்லது மாநில சட்டமன்றத்தின் சட்டத்தால் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் அல்லது நாடாளுமன்ற சட்டத்தால் நிறுவப்பட்ட பிற கல்வி நிறுவனங்கள் அல்லது பல்கலைக்கழக மானியக் குழு சட்டம்-1956, பிரிவு 3-ன் கீழ் பல்கலைக்கழகமாக அறிவிக்கப்பட்ட பிற கல்வி நிறுவனங்களில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். 2. ஏனைய தகுதிகள் இணையாக இருப்பின், பின்வரும் கல்வித் தகுதிகளில் ஏதேனும் ஒரு கல்வித் தகுதியை பெற்ற தேர்வருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். அ) காந்திகிராம கிராமிய நிறுவனத்தில் ஊரகப் பணிகளில் முதுகலை பட்டம் ஆ) விரிவாக்கவியலில் முதுகலை பட்டம் அல்லது பட்டயம் இ) சமூகவியலில் முதுகலை பட்டம் அல்லது பட்டயம்
2.	மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர்	1007	1. தேர்வர்கள் இந்தியாவில் உள்ள மத்திய அல்லது மாநில சட்டமன்றத்தின் சட்டத்தால் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் அல்லது நாடாளுமன்ற சட்டத்தால் நிறுவப்பட்ட பிற கல்வி நிறுவனங்கள் அல்லது பல்கலைக்கழக மானியக் குழு சட்டம்-1956, பிரிவு 3-ன் கீழ் பல்கலைக்கழகமாக அறிவிக்கப்பட்ட பிற கல்வி நிறுவனங்களில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். 2. ஏனைய தகுதிகள் இணையாக இருப்பின், பொருளாதாரம், கல்வி, சமூகவியல், புள்ளியியல், உளவியல் ஆகியவற்றில் பட்டம் பெற்றவர்கள் மற்றும் சமூக அறிவியலில் முதுகலை பட்டயம் மற்றும் தொழில்துறை அல்லது பணியாளர் மேலாண்மை அல்லது தொழிலாளர் நலனில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

5. மருத்துவ மற்றும் உடற்தகுதிகள்:

5.1. உதவி இயக்குநர் ஊரக வளர்ச்சி மற்றும் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் ஆகிய பதவிகளுக்குக்கான பணி நியமனத்திற்கு தெரிவு செய்யப்படும் தேர்வர்கள் உடற்தகுதிச் சான்றிதழை பணி நியமனத்தின் போது நியமன அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

5.2. உதவி இயக்குநர் ஊரக வளர்ச்சி மற்றும் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் ஆகிய பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படும் தேர்வர்களின் பார்வைத் திறன் தரம் III அல்லது அதற்கு மேம்பட்ட தரம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

5.3. கண்பார்வை குறைபாடுடைய தேர்வர்கள், அரசு மருத்துவமனையில் பணியாற்றும் தகுதி வாய்ந்த கண் மருத்துவ நிபுணரிடம் (Eye Specialist) கண் பார்வை தகுதிச் சான்றிதழை பெற்று பதவியில் சேரும் போது பணி நியமன அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

6.நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு பொருத்தமென அடையாளப்படுத்தப்பட்ட பதவிகள்

6.1. நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கான 4% இட ஒதுக்கீட்டிற்கு ஏற்றதாக பின்வரும் பதவிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன:-

பதவியின் பெயர்	**பதவிக் குறியீடு**	**நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளி வகைகள்**
உதவி இயக்குநர் ஊரக வளர்ச்சி	1006	LD, LD (others), LC, DF, AC
மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர்	1007	LV, HH, LD (OA, OL, OAL), LC, DF, AC, SLD
சுருக்கம்: LD – Locomotor Disability LC – Leprosy Cured DF – Dwarfism AC – Acid Attack Victims LV – Low Vision HH – Hard of Hearing OA – One Arm OL – One Leg OAL – One Arm One Leg SLD – Specific Learning Disability		
LD (Others) - Scoliosis and / or Kyphoscoliosis, Kyphosis, Spinal Cord Injuries and Spine Kyphoscoliosis		

7. ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு – I (தொகுதி I பணிகள்) க்காக இதுவரை அறிவிக்கப்பட்ட மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

S. No.	அறிவிக்கை/பிற்சேர்க்கை எண்	நாள்	அறிவிக்கப்பட்ட காலிப்பணியிட எண்ணிக்கை
1.	5/2026	23.06.2026	26
2.	5B/2026	13.08.2026	20
		மொத்தம்	46

குறிப்பு:
அறிவிப்பு எண் 05/2026, நாள் 23.06.2026-இல் குறிப்பிடப்பட்டுள்ள பிற அனைத்து விவரங்களும் மற்றும் நிபந்தனைகளும் எந்த மாற்றமுமின்றி தொடர்ந்து நடைமுறையில் இருக்கும்.

செயலாளர்